| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்:28 நாள்: 20.06.2021

## *கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் காணொலி காட்சி மூலம் நடைபெற்றது.*

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (21.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் தென்மேற்குப் பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் காணொலி காட்சி மூலம் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்
டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை தொடங்கவுள்ளதால் பருவமழையின்போது ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையிலும் / இழப்புகளை தவிர்க்கும் நோக்கத்திலும் பேரிடர் மேலாண்மைக்கான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மழை, வெள்ளம், புயல், இடி மற்றும் மின்னல் போன்ற பேரிடர்களை முன்கூட்டியே அறிந்துகொள்ள முன்னெச்சரிக்கை செயலியான **TNSMART App** மற்றும் மின்னல் முன்னெச்சரிக்கை செயலியான **DAMINI Mobile App** பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். மேலும், துறைசார்ந்த அலுவலர்கள் கீழ்கண்ட பணிகளை உடனடியாக மேற்கொண்டு தென்மேற்கு பருவமழையில் பொதுமக்களுக்கு எந்தவொரு பாதிப்புகளும், இழப்புகளும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- நீர்நிலைப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட வேண்டும்.
- பாதிக்கப்படும் பகுதிகளாக கண்டறியப்பட்ட ஆறுகள் மற்றும் கால்வாய்களை தூர்வாரி அதன் முழு அகலத்திற்கும் நீர்வழிப்பாதை உள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பெருமழை, வெள்ளநீர் தடையின்றி செல்லும் வகையில் கழிவுநீர் பாதைகளை சீர் செய்ய வேண்டும்.
- சாலைகள் மற்றும் பிற பகுதிகளை சீர் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
- அணைகள் மற்றும் ஏரிகளில் உபரி நீர் வெளியேற்றும் மதகுகள் மற்றும் உபரிநீர் வெளியேறும் நீர்வழிப் பாதைகளை ஆய்வு செய்து உபரிநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் அமைக்க வேண்டும்.
- பாலங்கள் மற்றும் கல்வெட்டுகள் ஆகியவற்றின் நீர்வழிப்பாதைகளில் இருபுறங்களையும் சீரமைக்க வேண்டும்.
- தற்காலிக நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- புதிதாக கண்டறியப்பட்ட பாதிக்கப்படும் பகுதிகளின் விபரங்களை உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.
- அவசரகால சூழ்நிலைகளில் பங்கெடுத்து பணியாற்றும் வகையில் தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்விநிறுவனங்கள், தகவல் தொடர்பு நிறுவனங்கள், ஆயில் கார்பரேஷன் நிறுவனங்கள் ஆகியவற்றை பேரிடர் காலத்தில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற அறிவுறுத்த வேண்டும்.
- பேரிடர் மீட்பு மற்றும் வெளியேற்றுதல் பணிகளுக்கு தேவையான சாதனங்கள், JCB, மர அறுவை இயந்திரங்கள், வாகனங்கள், மோட்டார் படகுகள், பரிசல்கள் மற்றும் அவற்றின் விபரங்கள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
- உயர் மின்விளக்குகள், மோட்டார் பம்பு செட்டுகள், டீசல் ஜெனரேட்டர் மற்றும் அவற்றின் இருப்பிடம் மற்றும் உரிமையாளர் அல்லது அமைப்புகளின் விபரங்களை தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
- மணல் மூட்டைகள் மற்றும் சவுக்குகட்டைகள் தேவையான அளவு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- ஒலிபெருக்கி பொருத்திய வாகனங்கள் மூலம் பொதுமக்களுக்கு முறையான முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை செய்ய வேண்டும்.

- வெள்ள பாதிப்புகளின்போது தொற்று நோய்கள் ஏற்படாதவாறு உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- நிவாரணமையங்களுக்கு ஜெனரேட்டர் மற்றும் மின்விளக்கு வசதிகள், டீசல் ஜெனரேட்டருக்குத் தேவையான டீசல் இருப்பு ஆகியவற்றின் தயார் நிலையை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- நிவாரணமையங்களில் தங்கவைக்க திட்டமிட்டுள்ள நபர்களுக்கு கொரோனா நோய்தொற்று ஏற்படாதவாறு அரசு வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி போதுமான இடவசதி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனி கழிவறை, குடிநீர் வசதி, உணவு, உடை, போர்வைகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறை, குழந்தைகள், கருவுற்ற பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

- நிவாரண மையங்களை சுகாதாரமாக பராமரிக்கும் வகையில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட வேண்டும்.

- தாழ்வாக உள்ள மின்கம்பிகள், பழுதடைந்த மின் கம்பங்கள் உடனடியாக அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- நோய் தடுப்பு மாத்திரைகள், முககவசம், கிருமிநாசினி ஆகியவை போதிய அளவில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ICU / ICCU வார்டுகளில் தடையற்ற மின்சாரம் உள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

- போதுமான அளவு ஆக்சிஜன் சிலிண்டர்கள், உயிர்காக்கும் மருந்துகள் இருப்பு, ஆம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்களை தயார் நிலையில் இருக்க வேண்டும்.

- பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் சமூக விரோத நடவடிக்கைகள் ஏற்படாதவாறு காவல் துறையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட வேண்டும்.

- காவல் துறையினர் High vulnerable area பகுதிகளை விரைவாக சென்று சேரவும், தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் செல்லும் வகையில் Green Corridor Traffic Plan வகுத்துத் தர வேண்டும்.

- பேரிடர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்வதற்காக வரும் மாநில பேரிடர் மீட்புப்படை(SDRF), தேசியபேரிடர் மீட்புப் படை(NDRF) மற்றும் மத்திய குழுக்கள் / முகமைகள் (Central Agencies) ஆகியோர் காவலர் பாசறைகளில் தங்க வைக்க தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

- வெள்ள பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கும் பகுதிகளில் முன்னதாக கால்நடை நிவாரண மையங்கள் அமைத்து, தேவையான மருந்துகள் மற்றும் தீவனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மேலும், அனைத்துத்துறை அலுவலர்கள் தென்மேற்கு பருவமழையின்போது மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு தயார்நிலையில் இருக்க வேண்டும் எனவும், மாவட்ட நிர்வாகம் அனைத்துவித முன்னேற்பாடு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவே, பொதுமக்கள் தென்மேற்கு பருவமழை குறித்து அச்சம் கொள்ள வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.சாய் சரண் தேஜஸ்வி இகாப., ஒசூர் சார் ஆட்சியர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா இஆப., மாவட்ட வன அலுவலர் திரு.எஸ்.பிரபு இவப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.பி.பெரியசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திரு.குருநாதன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |

PRO-KGI